21st July 1964]

திரு. மா. இராசாங்கம் : டெல்லியில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு இல்லத்திற்கு 'மதருஸ் ஹவுஸ்' என்று பெயர் பலகை மாட்டப் பட்டிருக்கிறதா? அல்லது தமிழ் நாடு இல்லம் என்று பெயர் போடப்பட்டிருக்கிறதா? 'மதருஸ் ஹவுஸ்' என்றிருந்தால் அதை தமிழ் நாடு இல்லம் என்று பெயர் மாற்ற சர்க்கார் ஆலோசனை கூறுமா?

கனம் சபாநாயகர் : தங்கள் வீட்டுக்குத் தாங்கள் பெயர் வைத்துக் கொள்ள ஆலோசனை எதற்கு?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது 'மெட்ருஸ் ஹௌஸ்' என்று பெயர் போட்டிருக்கிறது. 'மெட்ருஸ் ஹௌஸ்' என்று சொன்னால்தான் உலகம் பூராவுக்கும் நன்கு தெரிகிறது.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : டெல்லியில் கட்டப் பட்டிருக்கும் தமிழ் நாடு இல்லத்தில் தமிழ் நாடு சட்டசபை அங்கத்தினர்கள் போனால் தங்கலாமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தங்கலாம் என்று சொன் னேன். இலவசமாகத் தங்கலாமா என்று கேட்டால் இல்லை என்று சொல்கிறேன்.

தீ அணைக்கும் நிலையம்

*** 595 கேள்வி.—திரு. இரா. நாராயணன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திருச்சி மாவட்டம் பெரம்பலூர் வட்டத்தில் தீயணைக் கும் நிறுவனம் ஒன்று ஏற்படுத்த இடம் பார்க்கப்பட்டது உண்மையா?

(இ) ஆமெனில் அது எப்போது அமைக்கப்படும்?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) 1964-65-ல் பெரம்பலூரிலும் இதர மூன்று நகரங்களிலும் தீ அணைப்பு நிலையம் நிறுவும் திட்டம் குறித்து அரசாங்கம் அண்மையில் ஆலோசித்தது. ஆனால், நிதி நிலைமை கஷ்டமாயிருப் பதால், இத் திட்டத்தை அடுத்த ஆண்டில் மீண்டும் ஆலோசிக்கலா மென அரசாங்கம் முடிவு செய்தது.

*** 596 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

1964-ல் எந்தெந்த இடங்களில் தீயணைக்கும் படைகள் புதிதாக அமைக்க சர்க்கார் உத்தேசித்துள்ளது?

கனம் திரு. பூ. கக்கன் : ஓரிடத்தில் தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்துவது, அந்த இடத்தில் துரித வளர்ச்சியையும் அங்கே தொழிற்சாலை விபத்துக்கும், வீட்டு விபத்துக்களும் மற்ற தீ விபத் துக்களும் ஏற்படுகிற நிலையையும் பொறுத்திருக்கிறது. இந்த